# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.204/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 12 | நாள் | : | 28.07.2025 |
| பெயர் | : | செந்தில்குமாரி | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 28th day of July 2025.

எதிரிகள் ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சிவகிரி கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணிபுரிந்தபோது குருவிகுளம் காவல் நிலைய கு.எண்.239/2021 வழக்கின் சொத்துக்களை படிவம் 91ன் மூலம் பெறப்பட்டதை நடுவர் உத்தரவின்பேரில் சொத்து பதிவேட்டில் குறித்து சொத்துப் பதிவேட்டு எண்.361/2021 ஆக பதிவு செய்தேன். அதே தினம் குருவிகுளம் காவல் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் இரத்தம் பட்ட உடைகளையும், அரிவாளையும், சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட இரத்தம்பட்ட மற்றும் இரத்தம்படாத சிமெண்ட் துண்டுகளையும், நடுவரின் பார்வைக்கு வைத்து வேண்டுகோள் கடிதத்தில் நடுவர்

பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கடித வரைவு ஒன்றை தயாரித்தேன். நடுவரின் உத்தரவிற்கு பின்னர் பொருட்களை வேண்டுகோள் கடிதத்தில் குறிப்பிட்ட தலைமைக்காவலர் பெரியராஜ் என்பவர்மூலம் திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.12 ஆகும். நீதிமன்றத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் அ.சா.ஆ.13 ஆகும். முன்னதாக 18.08.2021 ம் தேதி திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சடலக்கூராய்வின் போது சேகரித்து வைக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்து அறிக்கை பெற்றுத் தரும்படி குருவிகுளம் காவல் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் நடுவரிடம் உத்தரவு பெற்று பாதுகாப்பாக இருந்து வரும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து உடல் உள்ளுறுப்புகளை பெற்று வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைக்க காவலர் திரு.பெரியராஜ் என்பவரை அனுமதித்து கடித வரைவு ஒன்றை தயாரித்து நடுவரின் அனுமதிக்கு பின்னர் அதை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ-14 ஆகும். நீதிமன்றத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் அ.சா.ஆ-15 ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் கு.வி. இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.07.28 18:02:34 +0530

# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.204/2024

| | | | |
|---|---|---|---|
| அ.சா . | : 11 | நாள் | : 28.07.2025 |
| பெயர் | : பெரியராஜ் | தொழில் | : |
| தந்தை பெயர்/ | : | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலுகா | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 28th day of July 2025.

எதிரிகள் ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

முதல் விசாரணை

நான் தற்போது சங்கரன்கோவில் போக்குவரத்து பிரிவில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு குருவிகுளம் காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது குருவிகுளம் காவல் நிலைய கு.எண்.239/2021 வழக்கின் 12.08.2021 ம் தேதி 12.15 மணிக்கு குருவிகுளம் காவல் நிலையத்தில் சடலக்கூராய்வு செய்ய காவல் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்றுக் கொண்டு திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மதியம் 1 மணிக்குச் சென்று மருத்துவ அலுவலரிடம் சடலத்தை அடையாளம் காட்டினேன். பின்னர் அவருக்கு HIV இருந்ததால் 72 மணி நேரம் கழித்த

பின்னர்தான் சடலக்கூராய்வு செய்ய இயலும் என்று கூறியதால் சடலத்தை சவக்கிடங்கில் பாதுகாப்பாக வைத்துவிட்டு நிலையம் திரும்பினேன். 15.08.2021ம் தேதி மீண்டும் மருத்துவமனைக்கு சென்று பேராசிரியரிடம் சடலத்தை அடையாளம் காட்டி சடலக்கூராய்வின்போது உடனிருந்து சடலக்கூராய்வு முடிந்த பின்னர் உறவினர்களிடம் நல்லடக்கத்திற்காக ஒப்படைத்து சடலக்கூராய்வின்போது வெட்டி எடுக்கப்பட்ட சிவப்பு நிற சட்டையும், நீல கலர் கைலியும், இரத்தகறையுடன் இருந்ததை பெற்று ஆய்வாளரிடம் ஒப்படைத்து நிலையம் திரும்பி அறிக்கை செய்தேன். பின்னர் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் உடல் உள்ளுறுப்புகளை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கொண்டு சென்று ஒப்படைத்து நிலையம் திரும்பி அறிக்கை செய்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். சடலக்கூராய்விற்கு எனக்கு வழங்கப்பட்ட கடவுச் சீட்டு அ.சா.ஆ-11 ஆகும்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.07.28 18:02:41 +0530